# நடப்பு நிகழ்வுகள்- மே 01 - 2017

- **புதுச்சேரியில் தலைக்கவசம் கட்டாயம்** அணிய வேண்டும் என்ற விதிமுறை மே 1 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

- 2014 – ம் ஆண்டு முதல் பாராளுமன்றம், சட்டசபைகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த வேண்டும் என்று **"நிதி ஆயோக்"** சிபாரிசு செய்துள்ளது.

- **ராமானுஜரின் 1000** வது அவதார தினவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருவதையொட்டி ராமானுஜரின் திருவுருவம் பொறித்த **தபால் தலை** 01.05.2017 அன்று டெல்லியில் பிரதமர் மோடி அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது.

- நாட்டின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான **'ஹாவல்ஸ்'** நிறுவன தலைவர் மற்றும் மேலாண் இயக்குனர் **அனில் ராய் குப்தாவுக்கு** அனைத்திந்திய மேலாண்மை சங்கத்தின் சார்பில் வர்த்தக துறையில் **வளரும் தலைவர் விருது** வழங்கப்பட்டுள்ளது

- அரசு அலுவலகங்களில் **எல்.இ.டி.பல்பு** பயன்படுத்துவதை ஜுன் மாதம் முதல் **கட்டாயமாக்க தமிழக அரசு முடிவு** செய்துள்ளது.

- தொழிற்சாலைகளில் இரவு பணிக்கு வரும் பெண்களுக்கு தேவையான வசதிகளை செய்து தர வேண்டும் என தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

- ஐக்கிய நாடுகள் சபையின் 2017-18 ஆண்டு அறிக்கையில் **ஈழத் தமிழர் பிரச்சனை குறித்து திமுக மற்றும் டெசோ** அமைப்பு இணைந்து நிறைவேற்றிய தீர்மானங்கள் பதிவாகி வெளியிடப்பட்டுள்ளன.

- இந்திய அரசின் "Controller General of Accounts (CGA)" ஆக **அந்தோணி லியான்சுலா** (Anthony Lianzuala) புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார்.

- விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அருகே உள்ள அண்ணமங்கலம் கோட்டையில் **அவுரங்கசீப் காலத்தைச்** சேர்ந்த **தெலுங்கு மொழி கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது**. இந்த கோட்டையின் சுவரை ஒட்டிய பாறையில் 12 வரிகள் உடைய தெலுங்கு மொழி கல்வெட்டு ஒன்று கண்டறியப்பட்டுள்ளது. இது 18-ம் நூற்றாண்டைச் சேர்ந்தாகும்.

- **முதல்வர் பதக்கம்** பெறும் விரல் ரேகை அதிகாரிகளுக்கு வழங்கப்படும் பரிசு தொகை உயர்த்தப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் முதல்வர் பதக்கம் பெறும் **விரல் ரேகை பிரிவு எஸ்.ஐ.**மற்றும் **இன்ஸ்பெக்டர்களுக்கு** 6,000 ரூபாய் வழங்கப்பட்ட பரிசு தொகை 10,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. அதேபோல் **டி.எஸ்.பி.**க்கு வழங்கப்படும் 10,000 ரூபாய் பரிசு தொகை 15,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

- பெட்ரோல் டீசல் விலையை தினசரி நிர்ணயிக்கும் நடைமுறை சோதனை அடிப்படையில் இந்தியாவின் புதுவை உள்ளிட்ட 5 நகரங்களில் மே 1 2017 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

- வீடு மற்றும் மனைகள் விற்பனையில் நடைபெறும் முறைகேடுகளை தடுப்பதற்காக இயற்றப்பட்ட **மனை வணிகச் சட்டம்** மே 1 முதல் அமலுக்கு வருகிறது. இந்த சட்டத்தை ஏற்று இதுவரை 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் மட்டுமே அறிவிக்கை வெளியிட்டுள்ளதால் தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களில் இந்தச் சட்டம் அமல்படுத்தப்படுவது கேள்விக்குறியாகியுள்ளது.

- **தத்தெடுத்தல்** தொடர்பான புதிய விதிமுறை மே 1 2017 முதல் அமலுக்கு வருகிறது. தற்போது மத்திய அரசின் தத்தெடுப்பு தொடர்பான இணையதளத்தில் பதிவு செய்துள்ள பெற்றோருக்கு **மூன்று குழந்தைகள் பரிந்துரைக்கப்படுவதும்** அவற்றில் இருந்து ஒன்றை அவர்கள் ஏற்றுக் கொள்வதும் வழக்கமாக உள்ளது. புதிய நடைமுறையின் படி குழந்தைகளை தத்தெடுக்க விரும்பும் பெற்றோர் இனி பல குழந்தைகளில் இருந்து ஒரு குழந்தையை தேர்ந்தெடுக்க முடியாது. தாங்கள் அளிக்கும் குழந்தையை ஏற்கவோ மறுக்கவோ மட்டுமே முடியும் என்று தேசிய தத்தெடுப்பு வள ஆணையம் (சிஏஆர்ஏ) தெரிவித்துள்ளது.